புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# கந்தர் அனுபூதியில் அணி நலன்கள்

பா.ஜெயபுனிதாராஜேஸ்வரி
பதிவு எண்: 22112014022006
முழுநேர முனைவர்பட்ட
ஆய்வாளர்,தமிழாய்வு மையம்,
ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி,
தூத்துக்குடி-628002.
மனோன்மணியம் சுந்தரனார்
பல்கலைக்கழகம் அங்கீகாரம் பெற்றது
அபிஷேகப்பட்டி, திருநெல்வேலி – 12,
தமிழ்நாடு, இந்தியா.

முனைவர். ச.மல்லிகா
நெறியாளர் & இணைப்பேராசிரியர்,
தமிழ்த்துறை & தமிழாய்வு மையம்
ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி,
தூத்துக்குடி-628002.

ஆய்வுச்சுருக்கம்:

தமிழ் மொழியில் ஒரு செய்யுளில் உள்ள சொற்களையும் பொருளையும் வேறுபடுத்திக்காட்டி அவற்றிலுள்ள அழகையும் நயத்தினையும் எடுத்துக் கூறுவது அணியிலக்கணம். அணியானது செய்யுளில் சிறப்புப் பெறுகிறது. கவிஞர்கள் பாடிய செய்யுட்கள் சிறப்புற்று விளங்க உதவுவன உவமை உருவகம் முதலிய அணிகளாகும். அணிகள் மொழிக்கு அழகு செய்கின்றன. ஆபரணங்கள் மனிதனை அழகுபடுத்துவது போன்று அணிகள் செய்யுட்களுக்கு அழகு சேர்க்கின்றன. அணிக்கு அடித்தளமாகத் தொல்காப்பிய உவமையியல் அமைகிறது. அதனை அடியொற்றி வந்த தண்டியலங்காரம் அணியினை செய்யுளணி, பொருளணி, சொல்லணி என்ற மூன்று பெரும்பிரிவுகளில் முப்பத்தைந்து வகை அணிகளை எடுத்துரைக்கிறது. மெய்ப்பொருள் உணர்வைப் புலப்படுத்துகின்ற நூலான கந்தர் அனுபூதி அணியழகு நிரம்பிய பாக்களால் பாடப்பட்டு உள்ளது. மெய்ஞானத்தை, தத்துவத்தை எடுத்துரைக்கின்ற போதிலும் அணிநயம் பொதிந்துள்ள செய்யுளாக அமைந்துள்ளன. இவற்றிலுள்ள அணிநயத்தைக் காண்பதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.

முன்னுரை:

தமிழின் தொன்மையான இலக்கண நூலான தொல்காப்பியத்தில் உள்ள உவமையியல் அணியிலக்கணத்தின் தோற்றத்திற்கு அடிப்படையாக அமைகிறது. இதனை வழியொற்றித் தண்டியலங்காரம் அணியிலக்கணம் கூறுகிறது. இலக்கியங்களில் அழகுக்காகவும் பொருள் விளங்குவதற்காகவும் உவமைகளைப் பயன்படுத்துவது கவிஞர்களின் இயல்பு. பரந்துபட்ட ஓசையை உடைய பாக்களைக் கொண்ட செய்யுட்களுக்கு அழகினைத் தருவது அணி. மெய்ஞான தத்துவத்தை எடுத்துரைக்கின்ற கந்தர் அனுபூதியில் பயின்று வந்துள்ள அணிகளின் நலன்களைக் காண்பதாக இவ்வாய்வு அமைகிறது.

ஆய்வு அணுகுமுறை:

செய்யுளில் பயின்று வரும் அணிகள் சொல்லிற்கும் பொருளிற்கும் அழகு சேர்க்கின்றன. இவ்வாய்வில் கந்தர் அனுபூதிப் பாடல்களில் உள்ள அழகுணர்ச்சி ஆராயப்படுவதால் ரசனைமுறைத் திறனாய்வு (அழகியல் திறனாய்வு) கையாளப்பட்டுள்ளது. கந்தர் அனுபூதியில் பயன்படுத்தப்பட்டுள்ள அணிகள் வகைப்படுத்தப்படுவதால் பகுப்புமுறைத் திறனாய்வும்

இதனை விளக்கிக் கூறுகின்ற போது விளக்கமுறைத் திறனாய்வும் இவ்வாய்வில் பயன்படுத்தப் பட்டுள்ளன.

*அணியின் தோற்றம்:*

*அணி என்பதற்கு அழகு என்பது பொருள். செய்யுளில் இருக்கின்ற சொல்லழகு, பொருளழகு பற்றி எடுத்துரைப்பது அணி இலக்கணம். அணிகளுக்கெல்லாம் தாயாக மூலமாக விளங்கும் உவமை அணியினைத் தொல்காப்பியர் பொருளதிகாரத்தில் உள்ள உவமையியலில் எடுத்துரைக்கிறார். தொல்காப்பியர் உவமையினை அணி என்று கூறவில்லை. பொருள் புலப்பாட்டுக்குரிய உறுப்பாக முப்பத்தேழு நூற்பாக்களில் கூறுகிறார். உவமை உருவகம் மற்ற அணிகளைக்காட்டிலும் சிறப்புடையதாக உள்ளன. உவமை உருவகங்கள் இலக்கியங்களில்,*

*'தண்தளிர் வியப்ப தகை பெறு மேனி தீயின் அன்ன ஒண்செவ் காந்தள்'*

*என்ற வரியில் வியப்ப உவம உருபாக அமைந்துள்ளது.*

*"செயலை அம்தளிர் ஏய்க்கும் எழில் நலம்"1*

*என்ற கலித்தொகைப் பாடல் அடியில் (தளிர் போன்றது எழில் நலம்) உவமை அமைந்துள்ளது.*

*"மருந்துகொள் மரத்தின் வாள்வடு மயங்கி"2*

*என்ற புறநானூற்றுப் பாடல் அடியில் (மரம் போல) உவம உருபு அமைந்துள்ளது. உவமை செய்யுட்களுக்கு கூடுதல் அழகினைத் தருகின்றன. ஆதலின் தொல்காப்பியனார் உவமை இயல் மட்டும் கூறி மற்ற அணிகளை விட்டுவிட்டதாக அ.ச.ஞானசம்பந்தம் கூறுகிறார். தொல்காப்பியத்திற்கு பின்னர் தோன்றிய அணி இலக்கணங்களில் தண்டியலங்காரம் சிறப்பிற்குரியது. தொல்காப்பியத்தையும் வடமொழி காவ்ய தரிசனத்தையும் அடியொற்றி தண்டியலங்காரம் எழுதப்பட்டது. பொதுவணி, பொருளணி, சொல்லணி என்ற மூன்று பிரிவுகளில் அணி வகைகளை தண்டியலங்காரம் எடுத்துரைக்கிறது.*

*கந்தர் அனுபூதி:*

*கந்தர் அனுபூதி என்னும் நூல் அருணகிரிநாதரால் பாடப்பட்டது. பத்தாம் திருமுறை நூலான திருமந்திரத்திற்கு ஒப்பாகக் கொள்ளத்தக்கது எனச் சமயவாணர்கள் கூறுகின்றனர். இந்நூலில் ஐம்பத்தொரு பாடல்கள் உள்ளன. ஒவ்வொரு பாடலும் நான்கு அடிகளால் ஆனது. பாடல்கள் எதுகைத்தொடை ஓட்டத்தால் சந்தச்சுவை உடையனவாக உள்ளன. இவற்றில் நூற்றைந்து பாடல்கள் கொண்ட பதிப்புகள் காணப்படுகின்றன. ஐம்பத்தொரு பாடல்கள் மட்டும் அழியாமல் காலம் கடந்து இன்றளவும் சிறப்புற நிலைத்து நிற்கின்றன. இந்நூலிலுள்ள பாடல்கள் மெய்ப்பொருள் நிறைந்த வாழ்க்கைத் தத்துவ நெறிகளை எடுத்துரைக்கின்றன.*

*பொதுவணி:*

*அணி இலக்கணத்தின் பொதுவான கருத்துகளை விளக்கும் பொதுவணியில், செய்யுள் வகை, செய்யுள் நெறி என்ற இரு பிரிவுகள் முறையில் இருபத்தைந்து நூற்பாக்கள் காணப்படுகின்றன. முத்தகம், குளகம், தொகை, தொடர்நிலை என்ற நான்கு வகையில் செய்யுள் நெறி அமைந்துள்ளன. இதில் முதலாவதாக இடம் பெறும் முத்தகச் செய்யுள் அமைப்பில் கந்தரனுபூதி அமைந்துள்ளன.*

*"அவற்றுள் முத்தகச் செய்யுள் தனிநின்று முடியும்"3 (தண்டி நூ.எண்-2)*

*என்று தண்டியலங்காரம் கூறுகிறது. இவ்வகையில், கந்தரனுபூதியில் உள்ள பாடல்கள் ஒவ்வொன்றும் ஒரு பொருள் தந்து முற்றுப் பெற்று அமைந்திருக்கின்றன. ஒவ்வொரு பாடலிலும் ஒரு கருத்து இடம் பெற்று முத்தகச் செய்யுள் அமைப்பினைக் கொண்டு திகழ்கிறது.*

*செய்யுள் நெறிகளாகச் செறிவு, தெளிவு, சமநிலை, இன்பம், ஒழுகிசை, உதாரம், உய்த்தலில் பொருண்மை, காந்தம், வலி, சமாதி என்ற பத்து குணங்களைத் தண்டி எடுத்துரைக்கிறது. இவற்றுள் சமாதி என்ற நெறியினைத் தவிர ஒன்பது வகை நெறிகளும் கந்தர் அனுபூதியில் இடம் பெற்றுள்ளன. இவை பாடல்களின் அடிப்படையில் பிரித்து பின்னிணைப்பில் அட்டவணையாக கொடுக்கப்பட்டுள்ளன.(பின்னிணைப்பு-1)*

*தண்டியலங்காரம் புலப்படுத்துகின்ற பொதுவணி முறைப்படி கந்தர் அனுபூதி அமைந்துள்ளன என்பது இதன் வழியாகப் புலனாகிறது.*

*பொருளணி:*

*பொருள் அடிப்படையில் செய்யுளுக்கு அழகு சேர்க்கும் அணிகளைத் தண்டி ஆசிரியர் முப்பத்து ஐந்து பிரிவில் எடுத்துரைக்கிறார். கந்தர் அனுபூதியில் உள்ள பாடல்களில் பொருள் செறிந்து காணப்படுகின்றன.*

*ஒரு பொருளின் இயல்பு தன்மையினைக் கூறுவது தன்மையணி. "கருதா மறவா நெறிகாண எனக் கிருதாள் வனசந் தரஎன்று இசைவாய்?" (கந்தர் அனுபூதி 21 ஆம் பாடல்) என்ற செய்யுளில் முருகனின் இயல்புத்தன்மை எடுத்துரைக்கப்படுவதால் தன்மையணி பயின்று வந்துள்ளதை அறியமுடிகின்றது.*

*உவமையினைத் தொல்காப்பியர்,*

*"வினைபயன் மெய் உரு என்ற நான்கே*
*வகைபெற வந்த உவமைத் தோற்றம்"4 (தொல்.பொருள்.நூற்.375)*

*என்று வினை, பயன், மெய், உரு என்ற நான்கன் முறையில் உவமை தோன்றும் என்று கூறுகிறார். ஒப்புமையுடைய மற்றொரு பொருளோடு இயைபு படுத்திக் கூறுவது உவமையணி. இவ்வகையில் "வீரா முதுசூர் படவே லெறியுஞ் சூரா" (கந்தர் அனுபூதி 16ஆம் பாடல்) என்ற அடியில் முருகனின் வீரம் (வினை-தொழில்) பயின்று வந்துள்ளது. "செய்யோய் மயிலேறிய சேவகனே" (கந்தர் அனுபூதி 25ஆம் பாடல்) என்ற அடியில் செய்யோய் (சிவந்த நிறமுடைய உடம்பு) உரு-நிறம் இடம் பெற்றுள்ளது. "பொன்னே மணியே பொருளே யருளே" (கந்தர் அனுபூதி 27ஆம் பாடல்) என்ற அடியில் முருகனின் மெய்-வடிவு இடம் பெற்றுள்ளதை அறிய முடிகின்றது. "மதிவா ணுதல் வள்ளியையல் லதுபின்" (கந்தர் அனுபூதி 35ஆம் பாடல்) என்ற அடியில் பிறைச் சந்திரனைப் போன்று நெற்றியை உடைய வள்ளியைப் புகழ்வதன் வழியாக பயன் இடம் பெற்றுள்ளதை அறிய முடிகிறது.*

*இதன் மூலம் தொல்காப்பியர் கூறுகின்ற உவமையணி கந்தர் அனுபூதியில் பயின்று வந்துள்ளது புலனாகிறது.*

*ஒரு பொருளில் தோன்றும் தன்மைக்கு இதனாலேயே இது நிகழ்ந்தது எனக் காரணத்தை மிகுத்து சொல்வது ஏதுவணி. இவ்வணியானது கந்தர் அனுபூதியில், "யாம் ஓதிய கல்வியும் எம் அறிவும் தாமே பெற வேலவர் தந்ததனால்" (கந்தர் அனுபூதி 17ஆம் பாடல்) என்ற அடியில் கல்வியையும் அறிவையும் வேலவன் தான் தந்தான் என்று மிகுத்துச் சொல்வதன் வழியாக ஏதுவணி பயின்று வந்துள்ளது புலனாகிறது.*

*தண்டியலங்காரம் தன்மேம்பாட்டுரையணியைத்,*

*"தான்தன் புகழ்வது தன்மேம் பாட்டு உரை"5 (தண்டி நூ.எண்.156)*

*என்று தன்னைத்தானே புகழ்ந்துரைப்பதாக எடுத்துரைக்கிறது. இவை, "அரிதாகிய மெய்ப் பொருளுக் கடியேன் உரிதா வுபதேச முணர்ந் தியவா" (கந்தர் அனுபூதி 20ஆம் பாடல்) என்ற பாடலில் மெய்ப்பொருளையும், உண்மைப் பொருளையும் முருகன் எனக்கு உரைத்தான்; என்று பெருமை தோன்ற கூறுவதன் வழியாகத் தன்மேம்பாட்டு உரையணி பயின்று வந்துள்ளது.*

*பொருளின் தன்மையினை மிகுந்த குணமுடைய பொருளால் ஏற்றிக் கூறுவது ஒப்புமைக் கூட்டவணி. "சும்மா இரு சொல் லறவென் றலுமே அம்மா பொரு ளொன்று மறிந்திலனே" (கந்தர் அனுபூதி 12ஆம் பாடல்) என்ற அடியில் முருகன் உபதேசம் செய்தவுடன் அவனைத் தவிர வேறு ஒரு உலகம் ஒன்றையும் அறியாமல் இருக்கிறேன் என்று தன்னை மறந்த நிலையில் முருகனின் பெருமையினை மிகுத்திக் கூறுவதன் மூலம் இதில் கூட்டவணி பயின்று வந்துள்ளதைக் காண முடிகிறது.*

*அதிசயம் என்னும் வடசொல் அதிக மேம்பாடு என்ற பொருளைத் தருகிறது. உண்மைத் தன்மையினை உள்ளபடி கூறாமல் உயர்த்திக் கூறுவது அதிசயவணி. "உருவாய் அருவாய் உளதாய் இலதாய் மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்" (கந்தர் அனுபூதி 51ஆம் பாடல்) என்ற பாடலில் மலரின் மணமாக மாணிக்கமாக ஒளியாக என்றெல்லாம் உயர்த்திக் கூறி இறுதியில் அருள் தன்மையினைப் புலப்படுத்துவன் மூலம் கந்தர் அனுபூதியில் அதிசயவணி பயின்று வந்துள்ளதை அறிய முடிகிறது.*

*வாழ்த்து என்பதை வடநூலார் 'ஆசி' என்று கூறுகிறார். பொருத்தமுடைய தன்மையினைப் புகழ்ந்து வாழ்த்திக் கூறுவது வாழ்த்தணி. "வாழ்வா யினி நீ மயில் வாகனகே" (கந்தர் அனுபூதி 31ஆம் பாடல்) என்ற அடியில் வாழ்த்து முறை அமைந்துள்ளதன் மூலம் கந்தர் அனுபூதியில் வாழ்த்தணி அமைந்துள்ளது.*

உவமையாக உள்ள பொருளுக்கும் உவமிக்கப்படும் பொருளுக்கும் இடையேயான வேறுபாட்டை நீக்கி இரண்டும் ஒன்றுதான் என்ற உள்ளுணர்வை வெளிப்படுத்துவது உருவகவணி. இதனை,

"உவமையும் பொருளும் வேற்றுமை ஒழிவித்து
ஒன்று என மாட்டின் அஃது உருவகம் ஆகும்"6 (தண்டி நூ.எண்.34)

என்று தண்டியலங்காரம் எடுத்துரைக்கிறது. இவ்வகையில் "ஞான கரனே நவிலத் தகுமோ?" (கந்தர் அனுபூதி 28ஆம் பாடல்) என்ற அடியில் ஞானம் தான் முருகன் என்று உறுதியிட்டு கூறுவதன் வழியாக உருவக அணி கந்தர் அனுபூதியில் இடம் பெறுவதை அறிய முடிகின்றது.

சொற்களை வரிசைப்படுத்திப் பின்னர் பொருளை வரிசைப்படுத்தி பாடுவது நிரல்நிறையணி. இதனை,

"நிரல் நிறுத்து இயற்றுதல் நிரல்நிறை அணியே"7 (தண்டி நூ.எண்.65)

என்று தண்டியலங்காரம் கூறுகிறது. இவ்வணியானது முறை நிரல் நிறை, மொழிமாற்று நிரல் நிறை என இரு பிரிவாக உள்ளது. இதில்,

முறை நிரல் நிறையானது செய்யுட்களில் உள்ள சொற்களின் அமைப்பு முறையினை எழுவாயில் ஆரம்பித்து பயனிலை வரை உள்ளதை உள்ளவாறு எடுத்தியம்புகிறது. 2,3,5,7,12,17,18.28,30,37,42,43,51 கந்தர் அனுபூதியில் உள்ள இந்தப் பதின் மூன்று பாடல்களில் முறை நிரல் நிறை அமைந்துள்ளது.

எழுவாய்க் கேற்பப் பயனிலைகளை மாற்றிப் பொருள் பொருந்துமாறு இயைத்துக் கூறுவது மொழிமாற்று நிரல் நிறை. கந்தர் அனுபூதியில் மொழிமாற்று நிரல் நிறை 1,4,6,8,9,10,11,13,14,15,16,19-27,29,31,36,38,41,44-50 இந்த முப்பத்தி எட்டு பாடல்களில் அமைந்துள்ளது. இதன் மூலம் நிரல்நிறையணி கந்தர் அனுபூதியில் பயின்று வந்துள்ளது புலனாகிறது. கந்தரனுபூதி பொருள் செறிவு நிறைந்த அணியாக மெய்ஞானத்தை எடுத்துரைப்பது பொருளணி மூலம் தெளிவாகிறது.

சொல்லணி:

சொல்லால் அணிகளின் இயல்பினை உணர்த்துவது சொல்லணி. சொல்லணி செய்யுளுக்கு அழகு சேர்க்கின்றது. படிப்பவரின் மனதில் எளிமையாகப் பதிய இவ்வணி துணை செய்கிறது. "வந்த சொல் மீண்டும் வருதல் மடங்கி வருதல் எனப்படுகிறது. இதனை வடநூலார் யமகம்"8 என்று கூறுவதாகத் தண்டியாசிரியர் எடுத்தியம்புகிறார். சொல்லணி அடுக்குத்தொடர் முறையில் அமைகிறது.

கந்தர் அனுபூதியில்,

"பாடும் பணியே பணியா அருள்வாய்" (கந்தர் அனுபூதி 1ஆம் பாடல்)
"தளைபட்டு அழியத் தகுமோ? தகுமோ?" (கந்தர் அனுபூதி 4ஆம் பாடல்)
"விடுவாய் விடுவாய் வினை யாவையுமே" (கந்தர் அனுபூதி 7ஆம் பாடல்)
"உய்வாய் மனமே ஒழிவாய் ஒழிவாய்" (கந்தர் அனுபூதி 14ஆம் பாடல்)
"முடியக் கெடவோ முறையோ? முறையோ?" (கந்தர் அனுபூதி 23ஆம் பாடல்)

இந்த அடிகளில் பணி, தகுமோ, விடுவாய், ஒழிவாய், முறையோ என்பன அடுக்குத்தொடர் முறையில் அமைந்துள்ளன. கந்தர் அனுபூதி செய்யுட்கள் சொல் நயம் பொதிந்த சொல்லணிகளாக உள்ளன.

முடிவுரை:

மனிதரிடம் எண்ணம் தோன்றிய போது மொழி தோன்றிவிட்டது. மொழி தோன்றிய போது உவமை தோன்றியது. பொருட்களை ஒப்பிட்டுப்பார்க்கும் இயல்பு மனிதரிடம் இயற்கையாக அமைகிறது. இலக்கியச் செய்யுட்களை அழகுற அமைப்பதற்கு அணி உதவுகிறது. தொல்காப்பிய உவமையியல் பிற்கால அணியிலக்கணத் தோற்றத்திற்குக் காரணமாக அமைந்தது. தண்டியலங்காரம் தோன்றக் காரணமாகத் தொல்காப்பியம் அமைந்தது. அருணகிரிநாதர் இயற்றிய கந்தர் அனுபூதி பாடல்களில் அணியினைப் பொருத்திப் பார்த்ததன் விளைவாகச் செய்யுளணி, பொருளணி, சொல்லணி அமைந்துள்ளது தெளிவாகின்றது. அருணகிரிநாதரின் கந்தர் அனுபூதி பாடல்களில் அணி நலன்கள் பயின்று வந்துள்ளன. மெய்ஞானத்தைப்

*புலப்படுத்துகின்ற கந்தர் அனுபூதியில் அணிகள் இயல்பாக அமைந்து பாடல்களைச் சிறக்கச் செய்கின்றன. கந்தனின் பக்தியில் திழைக்கும் அடியவர்களின் மனம் மேலும் ஈடுபாட்டுடன் பயில அணிகள் துணைபுரிகின்றன என்பதில் ஐயமில்லை. மெய்ஞான தத்துவத்தை அணியிலக்கண நோக்கில் எடுத்துரைக்கின்ற சிறந்த நூலாகக் கந்தரனுபூதி திகழ்கிறது என்பது இவ்வாய்வின் முடிவு.*

*மேற்கோள்கள்:*


*1. முருகன் புகழ் நூல்கள்- சிதம்பரம் சுவாமி, முதற் பதிப்பு-2006, ஜெயமணி வெளியீடுகள், திருநின்றவூர், சென்னை- 602 024.*

*2. தொல்காப்பியம்- பொருளதிகாரம், இளம்பூரணனார்(உ.ஆ), 14ஆம் பதிப்பு, சாரதா பதிப்பகம், சென்னை-14.*

*3. தண்டியலங்காரம் தெளிவுரை, முனைவர்.ச.திருஞானசம்பந்தம்(உ.ஆ), முதல் பதிப்பு-2012, கதிர் பதிப்பகம், திருவையாறு- 613 204.*

*4. புறநானூறு மூலமும் உரையும், இரா.இளங்குமரன், முதல் பதிப்பு-2003, வர்த்தமாணன் பதிப்பகம், தியாகராய நகர், சென்னை-17.*

*5. கலித்தொகை மூலமும் உரையும், இரா.இளங்குமரன், முதல் பதிப்பு-2003, வர்த்தமாணன் பதிப்பகம், தியாகராய நகர், சென்னை-17.*


*பின்னிணைப்பு:1 (செய்யுள் நெறி)*

*1. செறிவு - நெகிழ்ந்த ஓசையுடைய பாடல்- 51 பாடல்களும்*
*2. தெளிவு- எளிதில் பொருள் புரிதல் - 3,17,51 ஆம் பாடல்கள்*
*3. சமநிலை- வல்லினம்,மெல்லினம்,இடையினம் கலந்து வரல்- 51 பாடல்களும்*
*4. இன்பம்- இனிமைபடத் தொடுப்ப து- 15,18,20,23,39,51,47,42 ஆம் பாடல்கள்*
*5. ஒழுகிசை- மெல்லிய ஓசை- 51 பாடல்களும்*
*6. உதாரம்- சிறப்புப் பொருள் வெளிப்படல்- 51 பாடல்களும்*
*7. உய்த்தலில் பொருண்மை - செய்யுளில் உள்ள சொல்லால் பொருள் கொள்ளல்(பிற சொல் துணை நாடாமல்) - 1,2,3,12,14,17,34,46,51 ஆம் பாடல்கள்*
*8. காந்தம்- உலக இயல்பிற்கு ஏற்றவை- 51 பாடல்களும்*
*9. வலி- தொகைச் சொற்கள் வரல்- 9,13,23,24 ஆம் பாடல்கள்*

********* ********* ********** ********* ********* ********** ********** **********